A/c/IN/7/01/2021

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
## (எச்-பிரிவு)

---

**H7/SCH/2021** **நாள்: 07.01.2021**

---

## சுற்றறிக்கை

**பொருள்:** கல்வி-ஊக்கத்தொகை(ரூபாய் 50,000/-) 2020-2021 ஆம் கல்வியாண்டு-முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் SC/ST/SCCC மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மாணாக்கர்கள்/துறைத்தலைவர்கள்/நெறியாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை-தொடர்பாக.

**பார்வை:** ந.க.எண் உ3/24994/2019, நாள்:26.12.2020.

****

கீழ்கண்ட தகவல்கள் ஆதிதிராவிட நலத்துறை, சென்னை அவர்கள் தெரிவித்த தகவல்கள் தங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

(அ.)2020-2021 ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் SC/ST/SCCC மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க 01.02.2021 அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆதிதிராவிட நலத்துறை மூலம் தெரிவிக்கபட்டுள்ளது.

(ஆ.) மேலும் மாணவ/மாணவியர்கள் முந்தய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களில் பயன் பெற்றிருக்கும் நேர்வில் "H" மற்றும் "H1" பிரிவுகளை தொடர்பு கொண்டு குறைவான பயன் தரும் திட்டங்களில் பெறப்பட்ட தொகையினை கேட்டறிந்து அத்தொகையினை அரசு கணக்கில் கருவூலம் வழியாக SBI செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்து சீட்டின் நகலை விண்ணப்பத்தில் இணைக்கபட வேண்டும். செலுத்து சீட்டு இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் ஆதிதிராவிட நலத்துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ.) துறைத்தலைவர்கள்/நெறியாளர்களின் கவனத்திற்கு மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் உள்ள அனைத்து தகவல்களும் சரியானது என்றும், வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களில் இத்திட்டம் உட்பட மாணவர் பயன்பெற வில்லை என்று உறுதி செய்தும் முந்தைய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களின் பயன் பெற்றிருக்கும் நேர்வில் குறைவான பயன் பெற்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகையை மாணவர்களால் திருப்பி அரசு கணக்கில் செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்துச்சீட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளதா போன்ற அனைத்து விபரங்களையும் துறைத்தலைவர்கள்/நெறியாளர்கள் பரிசீலனை செய்வதுடன், கல்வி உதவித்தொகை பெற விண்ணபபங்களை பரிசீலனை செய்து சான்றிதழ் அளித்தால் மட்டுமே, அரசிடமிருந்து கல்வி உதவித்தொகை பெற முடியும் என்று தெரிவித்துகொள்ளப்படுகிறது. எனவே துறைத்தலைவர்கள்/நெறியாளர்கள் எடுக்கும் முடிவே இறுதியானதாகும். இது தொடர்பாக வேறு ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டால் "H" மற்றும் "H1" பிரிவுகளிள் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகிறது.

தொடர்சி......2

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன் பெற்றிருப்பின் அத்தொகையினை கருவூலம் வழியாக கீழ்கண்ட அரசு கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தவேண்டும்.

**"2225 Welfare of SCs/STs & OBCs 01 Welfare of SCs 911 Deduct Recoveries of over payment SA Deduct recoveries of over payment controlled by the Director of AD & TW Dept 77 Deduct recoveries 02 Remittance of over payments/ Remittance of excess drawals "D.P. code 2225-01-911-SA-37720)**

குறிப்பு

**2019-2020 ஆம் ஆண்டு முழுநேர முனைவர் கல்வி பயின்ற மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்க வடிவமைக்கப்பட்ட விண்ணப்பத்தினையே மாணாக்கர்கள் பயன்படுத்தி 2020-2021 ஆம் கல்வியாண்டு கல்வி ஊக்கத்தொகை பெற விண்ணப்பித்திருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாணாக்கர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறையால் தெரிவிக்கப்படுட்டுள்ளது.**

9/1/2021

பதிவாளர்(பொ)

**இணைப்பு:**

1. ஆதிதிராவிட நலத்துறை ஆணையரகத்தின் கடித நகல். (இணைப்பில் கண்டுள்ளபடி)

**நகல்:**

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அனைத்து புல முதல்வர்கள்
4. அனைத்து துறை தலைவரகள்/நெறியாளர்கள்
5. விடுதி ஒருங்கிணைப்பாளர்கள்
6. அனைத்து துறை மற்றும் விடுதி அறிவிப்பு பலகை
7. அலுவலக கோப்பு.

# ஆதிதிராவிடர் நலத்துறை

A.R. "H"

அனுப்புநர்
திரு.ச.முனியநாதன்.இ.ஆ.ப.,
ஆணையர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை -05.

பெறுநர்
முதல்வர்,
இணைப்பில் கண்டுள்ளபடி,

325
OFFICE OF THE REGISTRAR
04 JAN 2021
ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR - 608 002

ந.க.எண் உ3/ 24994/2019 நாள். 26.12.2020

அய்யா /அம்மையீர்,

பொருள்: கல்வி – ஊக்கத்தொகை – 2020-2021 ஆம் கல்வியாண்டு – முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1. அரசாணை நிலை எண் 71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 07.10.2013
2. அரசாணை நிலை எண் 5 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 29.01.2014
3. அரசாணை (நிலை) எண் 58 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை நாள் 21.09.2017

பார்வை 1, 2 மற்றும் 3-ல் காணும் அரசாணைகளின்படி, 2020-2021 ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிரரவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க **20.12.2020** முதல் **01.02.2021** அன்று மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

அனைத்து மாணாக்கர்களும் திட்டம் தொடர்பான விதிமுறைகளை அறிந்து கொள்ளவும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கி, கல்வி ஊக்கத் தொகை வேண்டி, விண்ணப்பிக்க ஏதுவாக இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான அரசு இணைய தளத்தில் ("www.tn.gov.in/forms/deptname/1") வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் 01.02.2021ஆம் தேதிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், <u>ஊக்கத் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலும், இதர சான்றுகள் ஏதேனும் இணைக்காமல் விடுபட்டிருந்தாலும், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது</u> (விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்) எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தாங்கள் தங்களது அலுவலக விளம்பர பலகையில் மேற்படி செய்தியினை வெளியிடவும், **தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் மேற்படி விபரத்தினை தெரிவிக்கவும்,** தெரிவிக்கப்பட்டதற்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சில கல்லூரிகள், மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பத்தினை பெற்று, கல்லூரியிலிருந்து அனுப்புவதாக தெரிவித்து, காலம் கடந்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். அவ்வாறு காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது. காலம் கடந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு கல்லூரியின் முதல்வரே முழு பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானதா எனவும், வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களில் இத்திட்டம் உட்பட மாணவர் பயன்பெறவில்லை என்பதை உறுதி செய்திடவும் முந்தைய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களின் பயன் பெற்றிருக்கும் நேர்வில் குறைவான பயன் பெற்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை மாணவரால் திருப்பி செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்துச் சீட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளதா போன்ற விபரங்கள் அனைத்தையும் கல்லூரி முதல்வர் பரிசீலனை செய்து விண்ணப்பங்களை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறிப்பு**

**2019-2020 ஆம் ஆண்டு முழுநேர முனைவர் கல்வி பயின்ற மாணாக்கர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க வடிவமைக்கப்பட்ட விண்ணப்பத்தினையே மாணாக்கர்கள் பயன்படுத்தி 2020-2021 ஆம் கல்வியாண்டு கல்வி ஊக்கத் தொகை பெற விண்ணப்பித்திருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாணாக்கர்களுக்கு தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

ஒம்/-ச.முனியநாதன்
ஆதிதிராவிடர் நல ஆணையர்

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக

28/12/2020

1/6

நகல்

1. பழங்குடியினர் நல இயக்குநரகம், சேப்பாக்கம், சென்னை—05